இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 07-08-2024

# ‘சதி’ செய்த முடிவுகள்!

பலவீனமான வெற்றியைத்தான் பா.ஜ.க. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் பெற்றது. ஆட்சி அமைக்கத் தேவையான 272 இடங்களை அதனால் பெற முடியவில்லை. 32 இடங்கள் குறைவாக 240 இடங்களை மட்டுமே கைப்பற்றியது. ஆந்திர சந்திரபாபு, பீகார் நிதிஷ் குமார் ஆகிய இரு கட்சிகளின் தயவில்தான் பிரதமர் நாற்காலியில் நரேந்திர மோடி அமர்ந்துள்ளார்.

**பா.ஜ.க. வாங்கிய 240 என்ற எண்ணிக்கையில் கூட குளறுபடிகள் நடந்திருப்பது இப்போது வெளிச்சத்துக்கு வந்துள்ளது. மக்களவைத் தேர்தலின் போது பதிவான வாக்குகளின் சதவீதம் குறித்து தேர்தல் ஆணையம் வெளியிட்ட தரவுகளில் உள்ள குளறுபடிகள் குறித்து விசாரணை கோரி பல்வேறு உயர்நீதிமன்றங்களில் 92 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்த மனுக்களில் சொல்லப்பட்ட தகவல்கள் அனைத்தும் பகீர் ரகமாக இருக்கின்றன.**

**மக்களவைத் தேர்தலில் பதிவான வாக்கு சதவீதம் குறித்து தேர்தல் ஆணையம் வெளியிட்ட தரவுகளில் பல்வேறு குளறுபடிகள் காணப்பட்டன. தேர்தல் நடந்து முடிந்து பல நாட்களுக்கு பிறகு இறுதி வாக்கு சதவீதம் மற்றும் பதிவான வாக்குகள் குறித்த விவரங்களை தேர்தல் ஆணையம் வெளியிட்டது. இது குறித்து** Association for Democratic Reforms **என்ற அமைப்பு ஆய்வு நடத்தி உள்ளது. இந்தியா முழுவதும் 79 நாடாளுமன்றத் தொகுதிகளில் பதிவான வாக்குகளின் எண்ணிக்கை திடீரென்று அதிகரித்துள்ளதை இந்த அமைப்பு சுட்டிக் காட்டி இருக்கிறது. இதனைச் சுட்டிக் காட்டித்தான் 92 வழக்குகள் பதிவாகி உள்ளன.**

தேர்தல் ஆணையத்தின் நம்பகத்தன்மை கேள்விக்குறியாகி இருக்கிறது. இதன் மூலமாக பா.ஜ.க. அடைந்த வெற்றியும் கேள்விக் குறியாகி இருக்கிறது. ‘சதி’ செய்யப்பட்ட வெற்றியாகவே பா.ஜ.க.வின் வெற்றியைக் கருத வேண்டி உள்ளது.

தேர்தல் நடந்து கொண்டிருக்கும் போதே ஒரு மணி நேரத்துக்கு ஒரு முறை வாக்குகளின் சதவிகிதத்தை அறிவிப்பார்கள். இறுதியாக அறிவிக்கும் போது ஒன்று அல்லது அதைவிட ஒன்று மட்டும் கூடுதலாக இருக்கும். ஆனால் இம்முறை வாக்கு சதவிகிதத்தையும் அறிவிக்கவில்லை. இறுதியாக அறிவிக்கப்பட்டதும் அதிகம் ஆகும். தனக்கு வசதிப்பட்ட தேர்தல் ஆணையர்களை விதிமுறைகளை மீறி நியமித்தது முதல் இது போன்ற சந்தேக ரேகைகள் படர்ந்தன. அது இப்போது அதிகமாக ஆகி உள்ளது.

**வாக்குப்பதிவு சதவிகிதம் தொடர்பாக தேர்தல் ஆணையம் முதலில் வெளியிட்ட பட்டியலுக்கும் இரண்டாவதாக வெளியிட்ட பட்டியலுக்கும் பெரிய அளவு வித்தியாசம் இருந்தது. 3.2 சதவிகிதம் முதல் 6.32 சதவிகிதம் வரை வித்தியாசம் இருந்தது. ஒரு விழுக்காடு வாக்குகள் வித்தியாசத்தில் ஆட்சிகள் மாறிவிடும் என்பதை மனதில் வைத்து பார்த்தால் 3.2 - 6.32 என்ற எண்ணிக்கை எவ்வளவு பெரியது என்பதை உணரலாம்.**

அதிலும் குறிப்பாக ஆந்திர மாநிலத்தில் 12.54 சதவிகிதம் உயர்ந்தது. ஒடிசாவில் 12.48 சதவிகிதம் உயர்ந்தது. இதற்கு முன் நடந்த எந்தத் தேர்தலிலும் அறிவிக்கப்பட்ட வாக்குகளில் இந்தளவுக்கு வித்தியாசம் இருந்ததில்லை.

* **ஒடிசாவில் 18 தொகுதிகள்**
* **மகாராஷ்டிராவில் 11 தொகுதிகள்**
* **மேற்கு வங்கத்தில் 10 தொகுதிகள்**
* **ஆந்திராவில் 7 தொகுதிகள்**
* **கர்நாடகாவில் 6 தொகுதிகள்**
* **சட்டீஸ்கரில் 6 தொகுதிகள்**
* **ராஜஸ்தானில் 6 தொகுதிகள்**
* **பீகாரில் 3 தொகுதிகள்**
* **அரியானாவில் 3 தொகுதிகள்**
* **மத்தியப் பிரதேசத்தில் 3 தொகுதிகள்**
* **தெலுங்கானாவில் 3 தொகுதிகள்**
* **அசாமில் 2 தொகுதிகள்**
* **அருணாசலப் பிரதேசத்தில் 1 தொகுதி**
* **குஜராத்தில் 1 தொகுதி**
* **கேரளாவில் 1 தொகுதி** – ஆகிய தொகுதிகளில் வாக்குகளின் வித்தியாசம் அதிகம் ஆகி இருக்கிறது. இந்த தொகுதிகளில் மொத்தமாகக் கூட்டினால் 4.65 கோடி வாக்குகள் அதிகமாகச் சொல்லப்பட்டுள்ளது. இவைதான் பா.ஜ.க. கூட்டணி வெற்றி பெற உதவியவை என்பதில் சந்தேகமில்லை.

18 தொகுதிகளில் பா.ஜ.க. கூட்டணி வேட்பாளர்கள் மிகக் குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார்கள். மும்பை வடமேற்கு தொகுதியில் சிவசேனா தான் முன்னணியில் இருந்து வந்தது. திடீரென்று பா.ஜ.க. வேட்பாளர் 48 வாக்குகள் முன்னணிக்கு வந்தார். அதன்பிறகு வாக்கு எண்ணிக்கையை அப்படியே நிறுத்திவிட்டு, பா.ஜ.க. வென்றதாக அறிவித்துவிட்டார்கள். முழுமையாக அந்த தொகுதியின் அனைத்து வாக்குகளும் எண்ணவே இல்லை. பா.ஜ.க. வெற்றி என்ற அறிவிப்புக்கு எதிராக அவர் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

**மூத்த பத்திரிகையாளர் பூனம் அகர்வால் இதில் முறைகேடு நடந்துள்ளது என்கிறார். மும்பையில் இருந்து வெளியாகும் ‘மிட் டே’ நாளிதழும் முறைகேடு நடந்துள்ளது என்கிறது. ‘வெற்றி பெற்ற வேட்பாளரின் உறவினருக்கும், தேர்தல் ஆணையப் பணியாளருக்கும் இதில் தொடர்பு உள்ளது’ என்றும் அவர்கள் யார் என்றும் பெயருடன் குறிப்பிட்டு குற்றம் சாட்டியுள்ளது ‘மிட் டே’. இப்படி 79 தொகுதிகளில் வெற்றியானது சதிச் செயல் மூலமாக கிடைத்த வெற்றியாக அமைந்துள்ளன.**

‘திருடப்பட்ட வெற்றி’ என்று சமூகச் செயற்பாட்டாளர்கள், பா.ஜ.க. கூட்டணி குறித்துச் சொல்வதும் சரியானதுதான் என்ற சந்தேகம் வலுத்து வருகிறது.




முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டையொட்டி, இளைஞர் அணி சார்பில் ‘என் உயிரினும் மேலான’ எனும் பேச்சுப் போட்டியை தமிழ்நாடு முழுவதும் நடத்தப்படவிருக்கிறது. இதனையொட்டி கழகத்திற்கு 100 இளம் பேச்சாளர்களை தந்திடும் வகையில் நடத்தப்படவுள்ள இப்போட்டிகளில் நடுவர்களாக செயல்படவுள்ள தி.மு.கழகம் மற்றும் திராவிட இயக்கத்தின் முன்னணியினரை அன்பகத்தில் நேற்று கழக இளைஞர் அணிச் செயலாளரும், அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சந்தித்து இந்தப் பேச்சுப் போட்டிகளில் பங்கேற்க 17 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் ஆர்வமுடன் விண்ணப்பித்துள்ள நிலையில், அவர்களில் இருந்து அடுத்த தலைமுறை திராவிட இயக்கப் பேச்சாளர்களை உருவாக்கித் தந்திடும் நடுவர்களின் பணி சிறக்க வாழ்த்தினார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தலின் பேரில் முதுநிலை மருத்துவப் படிப்பு

# ‘நீட்’ தேர்வுக்கு தமிழ்நாட்டிலேயே தேர்வு மையங்கள்!

## ஒன்றிய அமைச்சர் ஜே.பி.நட்டா – பி.வில்சன் எம்.பி. கோரிக்கையை ஏற்று உத்தரவு!

*புதுடெல்லி, ஆக.7-*

*முதுநிலை மருத்துவ படிப்புகளுக்கான நீட் தேர்வுக்கு விண்ணப்பித்த தேர்வர்களுக்கு, தமிழகத்திலேயே தேர்வு மையங்களை, தேசிய மருத்துவ அறிவியல் தேர்வு வாரியம் ஒதுக்கியுள்ளது.*

*நாடு முழுதும் அரசு மற்றும் சுயநிதி மருத்துவ கல்லூரிகளில் உள்ள, முதுநிலை மருத்துவ படிப்புகளுக்கான சேர்க்கை, நீட் மதிப்பெண் அடிப்படையில் நிரப்பப்பட்டு வருகிறது. இதற்கான நீட் தேர்வை, தேசிய மருத்துவ அறிவியல் தேர்வுகள் வாரியம் ஆக., 11 ஆம் தேதி நடத்த உள்ளது. தமிழகத்தில் இருந்து 25,000 பேர் உட்பட நாடு முழுதும், 2 லட்சத்துக்கும் மேற்பட்டோர் தேர்வு எழுத உள்ளனர்.*

*இந்நிலையில், தமிழக தேர்வர்களுக்கு அவர்கள் கேட்டிருந்த நான்கு விருப்ப தேர்வு மையங்களை ஒதுக்காமல் 750 கி.மீ., 1000 கி.மீ., தொலைவில் ஆந்திரா, கர்நாடகா, கேரளா மாநிலங்களில், மையம் ஒதுக்கப்பட்டது. இதற்கு பல்வேறு தரப்பிலும் எதிர்ப்பு கிளம்பியது.*



முதுநிலை மருத்துவ படிப்புகளுக்கான ‘நீட்’ தேர்வுக்கு விண்ணப்பித்த தேர்வர்களுக்கு, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி தமிழகத்திலேயே தேர்வு மையங்களை ஒதுக்கக் கோரி தி.மு.க. எம்.பி. வில்சன், மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் ஜே.பி.நட்டாவை சந்தித்து மனு அளித்தார்.

*இந்நிலையில், தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினர் வில்சன், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி ஒன்றிய சுகாதாரத்துறை அமைச்சர் ஜே.பி.நட்டாவை சந்தித்து, தேர்வர்களுக்கு அந்தந்த மாநிலத்திலேயே மையங்களை ஒதுக்க கோரிக்கை வைத்தார்.*

*அதைத் தொடர்ந்து, 75 சதவீதத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு, தமிழகத்திலேயே தேர்வு மையங்களை, தேசிய மருத்துவ அறிவியல் தேர்வுகள் வாரியம் மறு ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த தகவல், மின்னஞ்சல் வாயிலாக, தேர்வர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.*

### சிங்கம்புணரி எஸ்.புதூர் ஒன்றியத்தில்

# 7 திட்டப்பணிகள்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தொடங்கி வைத்தார்!

*சிவகங்கை, ஆக. 7 -*

*சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர். தொகுதி சிங்கம்புணரி, எஸ்.புதூர், ஒன்றியங்களில் ஊரக வளர்ச்சித் துறை, கூட்டுறவு மற்றும் உணவு பாதுகாப்பு துறை, மின்வாரியத் துறை ஆகியவற்றின் சார்பில் ஊராட்சி மன்ற கட்டிடங்கள் ஊராட்சி மன்றச் செயலக கட்டிடங்கள் புதிய நியாய விலை கடைகள், மின்மாற்றிகள் ஆகிய ஏழு பணிகள் ரூபாய் 106.90 லட்சத்தில் முடிவடைந்துள்ளது.*

*இவற்றை பொது மக்களுக்கு அர்ப்பணிக்கும் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சியர் திருமதி ஆசா அஜித் தலைமையில் நடைபெற்றது.*

*கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் முடிவடைந்த 7 திட்டப் பணிகளை பொதுமக்களுக்கு அர்ப்பணித்து சிறப்புரையாற்றினார்.*

*இந்த நிகழ்ச்சியில் மாவட்ட திட்ட அலுவலர் ராமசிவராமன் மின்வாரிய செயற் பொறியாளர் மொண்டி, ஊராட்சி மன்றத் தலைவர்கள் தங்கமுத்து, ரவிச்சந்திரன், திருமதி பூங்கோதை, சண்முகம், உட்பட வருவாய்த் துறை, மின்வாரியத் துறை, கூட்டுறவுத்துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.*

### போட்டியின்றி தேர்வு!

# கோவை மாநகராட்சி மேயராக பதவியேற்றார் ரங்கநாயகி!

## அமைச்சர்கள் - தி.மு.க. நிர்வாகிகள் வாழ்த்து!

*கோவை, ஆக. 7 -*

*கோவை மாநகராட்சி மேயராக ரங்கநாயகி அமைச்சர்கள் கே.என். நேரு. முத்துசாமி ஆகியோர் முன்னிலையில், பதவியேற்றுக் கொண்டார்.*

*அவருக்கு மாநகராட்சி ஆணையரும், தேர்தல் அதிகாரியுமான சிவகுரு பிரபாகரன், பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.*



*மேயர் ரங்கநாயகிக்கு, அமைச்சர்கள் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் வாழ்த்துத் தெரிவித்தனர்.*

*பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் கே.என்.நேரு,*

*முதலமைச்சரின் உத்தரவுப்படி, கோவை மாநகராட்சி மேம்பாட்டிற்காக 300 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, புதிய சாலை பணிகள், குடிநீர் வழங்கும் பணிகள் நடைபெற்று வருவதாகத் தெரிவித்தார்.*



சென்னை சூளைமேடு, ஜெய்கோபால் கரோடியா அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நேற்று (06.08.2024), சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி.கீதாஜீவன் தலைமையில் நடைபெற்ற முதியோர்களுக்கெதிரான கொடுஞ்செயல் எதிர்ப்பு மற்றும் பெண் குழந்தைகளைக் காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் கையெழுத்து இயக்கத்தை அமைச்சர் கீதாஜீவன் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் அரசுச் செயலாளர் திருமதி ஜெயஸ்ரீ முரளிதரன், சமூக நல ஆணையர் திருமதி வே.அமுதவல்லி, சென்னை பெருநகர மாநகராட்சி பணிகள் நிலைக்குழுத் தலைவர் நே.சிற்றரசு மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.